orientation
orientamento
berufsberatung
.ch



# பாடசாலையிலிருந்து தொழிலுக்கு

பெற்றோர்களுக்கான தகவல்

அன்பான பெற்றோர்களே
உங்களுக்கு 8., 9. அல்லது 10. ஆம் வகுப்பில் கற்கும் ஒரு மகளோ அல்லது ஒரு மகனோ உள்ளது. உங்கள் மகனோ அல்லது மகளோ தமக்கென ஒரு தொழிலையோ அல்லது தொடர்ந்து கற்கவேண்டிய பாடசாலையையோ முடிவுசெய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. இது ஒரு முக்கிய அடியெடுப்பாகும், ஏனென்றால் ஒரு தொழிற்கல்வியைக் கற்று முடித்து ஒரு தொழிலுக்கு செல்வது அல்லது மத்திய பாடசாலையில் கற்று அதை நிறைவுசெய்வது, சுவிசில் இளம் நபர்கள் அவர்களது தொழிலில் மேலதிகமாக விருத்திபெறுவதற்கான ஒரு சிறந்த அடித்தளமாகும்.

## பாடசாலை எவ்வாறு உதவுகின்றது?

8. மற்றும் 9. ஆம் வகுப்பு மாணவர்கள் மற்றும் மாணவிகள் (ஹார்மோஸ் (Harmos): 10. மற்றும் 11. ஆம் வகுப்பில்) ஒரு தொழிலை அல்லது தொடர் கற்கைநெறியைக் கற்பதற்கான ஒரு பாடசாலையைத் தேர்ந்தெடுப்பதற்கு பாடசாலை தயார்படுத்துகின்றது. இந்தத் தயார்படுத்தல் எவ்வாறு உள்ளது என்பது குறித்து ஆசிரியர் அல்லது ஆசிரியையிடம் உதாரணமாக பெற்றோர் ஆசிரியர் சந்திப்புகூட்டங்களின் போது நீங்கள் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

## தொழில் ஆலோசனை நிலையம் எவ்வாறு உதவுகின்றது? [1]

தொழில் ஆலோசனை நிலையம் தொழில்கள் மற்றும் தொடர்கற்கைநெறி வாய்ப்புகள் குறித்து தகவல்களை வழங்குகின்றது. இதன்போது ஒருவர் தனது விருப்பங்கள், திறமைகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்து அலசி ஆராய்வதற்காக அவர்களுடன் ஒரு தனிப்பட்ட கலந்துரையாடலுக்கான நேரத்தை ஒழுங்கு செய்யலாம். மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கு இவ்வசதி இலவசமானது மற்றும் நம்பிக்கைக்குரியதாகும்.

பாடசாலை மற்றும் தொழில் ஆலோசனை நிலையம் இளையோருக்கு ஒரு தொழிலை அல்லது தொடர்கற்கைநெறி பாடசாலையைத் தேர்வுசெய்யவும், அத்துடன் தேவைப்படின் தொழிற்கல்விக்கான ஒரு இடத்தைத் தேடுவதற்கும் உதவிசெய்யும். இதற்கான முழுப்பொறுப்பும் இதனுடனான பிரதான செயற்பாடுகள் அனைத்தும் குடும்பத்தைச் சார்ந்ததாகவே இருக்கும்.

## இளையோர்கள் சொந்தமாக என்ன செய்ய வேண்டும்? இதன்போது உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் எவ்வாறு உதவலாம்?

அதாவது உங்கள் மகன் அல்லது உங்கள் மகள் பாடசாலையின் பின்பு தமக்கென ஒரு தொழிற்கல்வி கற்கும் இடத்தை கண்டடையும் வரை சொந்தமாக உசாராக இருக்க வேண்டும். பலருக்கு இது இலகுவான விடயமல்ல. ஆகவே முக்கியமானது என்னவென்றால், குடும்பமும் சேர்ந்து உதவி செய்வதாகும். உங்களுக்குக் கேள்விகள் இருந்தாலோ தொடர்ந்து செல்ல முடியாவிட்டாலோ, தயவுசெய்து தொழில் ஆலோசனை நிலையத்தை நாடுங்கள்.

ஒரு தொழிலையோ தொடர்கற்கைநெறி பாடசாலையையோ தேடுவதென்பது ஒரு தொடர்செயல்முறையாகும். இதன் அர்த்தம்: கேள்விகளைக் கேட்பதுடன் அதற்கான விடைகளைத் தேடுவதாகும். இதற்குக் காலம் தேவைப்படும். விடைகளைக் கண்டுகொள்வதற்கான முக்கிய கேள்விகள் மற்றும் முக்கிய வழிகள் கீழேவிளக்கப்பட்டுள்ளது:

---

[1] ஒவ்வொரு மாநிலத்திலும் ஆகக் குறைந்தது ஒரு தொழில் ஆலோசனை நிலையமாவது உள்ளது. இதன் முகவரிகளை நீங்கள் பாடசாலையில், நகரசபையில் அல்லது கீழே பெற்றுக்கொள்ளலாம்:
டொச்: www.adressen.sdbb.ch பிரெஞ்சு: www.adresses.csfo.ch இத்தாலி: www.indirizzi.csfo.ch
தொழில் ஆலோசனை நிலையம் அநேகமாக ஒரு விசேட பெயரில் அறியப்பட்டிருக்கும் அல்லது ஒரு சுருக்கமான பெயராக இருக்கும்:

| | |
|---|---|
| டொச் பேசும் சுவிஸ் பகுதியில்: | BIZ, Laufbahnzentrum |
| பிரெஞ்சு பேசும் சுவிஸ் பகுதியில்: | OP, SOPFA, OFPC, COS, OROSP, CIO, OCOSP |
| இத்தாலி பேசும் சுவிஸ் பகுதியில்: | orientamento, UOSP |

## A தன்னைத் தானே அறிந்து கொள்ளல்

### உங்கள் பிள்ளைகள் பின்வரும் கேள்விகளைத் தம்மிடமே கேட்க வேண்டும்:

- நான் பாடசாலையில் எதில் திறமையாக உள்ளேன்? எந்தப் பாடங்களை நான் விரும்புகிறேன்?
- நான் ஓய்வுநேரங்களில் அல்லது குடும்பத்தில் எவற்றைக் கற்றுக் கொண்டேன்? (உதாரணமாக வித்தியாசமான மொழிகளைக் கற்பதற்கு, சமைப்பதற்கு, கொள்வனவிற்கு, சிலவற்றைத் திருத்துவதற்கு, நண்பிகள் மற்றும் நண்பர்கள அவர்களுக்குப் பிரச்சனை இருக்கையில் கூறுவதை கிரகிப்பதற்கு, ஒரு விளையாட்டுக் கழகத்தில், ஒரு இளையோர் குழுவில் அல்லது வேறு கழகங்களில் விழாக்களில் சேர்ந்து உதவி செய்வதற்கு.)
- ஒரு பகுதிநேர வேலையின்போது, நான் சரியான நேரத்திற்கும் பொறுப்புடனும் வேலை செய்து காட்டினேனா? (உதாரணமாக செய்தித்தாள் விநியோகிப்பது, பிள்ளைகளைப் பாதுகாப்பது, புல்லு வெட்டுவது, ஒரு தொழிலகத்தில் கிழமைக்கு 2-3 மணித்தியாலங்கள் சேர்ந்து உதவிசெய்தது)
- எதில் எனக்கு பலம் உள்ளது? எதில் எனக்கு பலவீனம் உள்ளது?

### நீங்கள் பெற்றோராகப் பின்வரும் உதவிகளை வழங்கலாம்:

- எவ்விதமான செயற்பாடுகள் உங்கள் மகனுக்கு அல்லது மகளுக்குப் பொருத்தமானது மற்றும் எதில் அவர்களுக்குப் பலம் உள்ளது என்பது குறித்து ஒன்றுசேர்ந்து யோசித்து உதவுங்கள்.

## B தொழில்களை அறிந்து கொள்தல்

### தகவல்பெறுவதாலும் „குறுகியகால தொழில் செய்பயிற்சி“[2] ஊடாகவும் உங்கள் பிள்ளை தொழில்கள் அறிதல்.

- சுயமாக அறிதல்: தொழில் விளம்பரங்களை வாசித்தல், தொழில் படங்களைப் பார்த்தல், தகவல் நிகழ்வுகள் [3] மற்றும் தொழில்கள் [4] தொழில் பயிற்சி கண்காட்சிக்குச் செல்லுதல், கேள்விகள் இருப்பின் தொழில் ஆலோசனை நிலையத்தில் விளக்கம் பெறல்.
- „குறுகியகால தொழில் செய்பயிற்சி“ செய்தல். ஒரு „குறுகியகால தொழில் செய்பயிற்சி“ என்பதில் ஒருவர் ஒரு தொழிலை அதன் தொழிலகத்தில் நேரடியாக செய்து அறியலாம். „குறுகியகால தொழில் செய்பயிற்சி“ வழமையாக 2 தொடக்கம் 3 நாட்கள் நடைபெறும். தொழிலகங்கள் „குறுகியகால தொழில் செய்பயிற்சி“ செய்வதற்கும் தமது தேர்வு முறையை பாவிக்கின்றனர்: அவர்கள் இளையோரை கண்டறிந்து கொள்ள விரும்புகிறார்கள். எவர் இந்த „குறுகியகால தொழில் செய்பயிற்சியில்“ சிறந்த அபிப்பிராயத்தைக் கொடுகின்றார்களோ, அவர்களுக்கு அந்த நிறுவனத்தில் தொழிற்கல்வி பெறுவதற்கான சந்தர்ப்பம் சிலவேளையில் உண்டு.

### பெற்றோர்களாக நீங்கள் எவ்வித உதவிகளை வழங்க முடியும்?

- சந்தர்ப்பத்தைப் பொறுத்து உங்கள் மகளை மற்றும் மகனை தகவல் நிகழ்வுகளுக்கு அழைத்துச் செல்லுங்கள். தகவல் நிகழ்வுகள் இடம்பெறும் திகதிகளை உங்கள் பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தி உதவுங்கள்.
- உங்கள் மகளை மற்றும் மகனை தொழில் ஆலோசனை நிலையத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். சுவிசில் தொழிற் பயிற்சி வசதிகள் குறித்து நீங்கள் சொந்தமாக தகவல் பெற்றுக்கொள்ளுங்கள்.
- குறுகியகால தொழில பயிற்சி அறிமுக அனுபவம் குறித்து உங்கள் மகளுடன் மற்றும் மகனுடன் கலந்துரையாடுங்கள்.

---

[2] டொச் — Schnupperlehre
பிரெஞ்சு — stage d'information professionnelle; stage en entreprises
இத்தாலி — stage d'orientamento

[3] தகவல் நிகழ்வுகள்:
டொச் பேசும் சுவிஸ் பகுதியில்: www.berufsberatung.ch/infoveranstaltungen
பிரெஞ்சு பேசும் சுவிஸ் பகுதியில்: www.orientation.ch/manifestations
இத்தாலியம் பேசும் சுவிஸ் பகுதியில்: www.orientamento.ch/eventi

[4] தொழில்கள் மற்றும் தொழிற்கல்வி குறித்த கண்காட்சிகள்:
தொழில் ஆலோசனை நிலையங்கள் அல்லது பாடசாலைகளில், எப்போது மற்றும் எங்கு அடுத்து வரும் கண்காட்சிகள் இடம்பெறும் என்பதைக் கேட்டறிந்து கொள்ளுங்கள். இந்தக் கண்காட்சிகள் வித்தியாசமான தலைப்புகளில் இடம்பெறுகின்றன.
டொச்: Berufsmesse, Ausbildungsmesse, Berufsschau
பிரெஞ்சு: Salon des métiers, Cité des métiers, salon de la formation
இத்தாலியம்: SPOProfessioni

## C தொழில் மற்றும் பாடசாலையைத் தேர்வு செய்தல்

தொழிலைத் தெரிவுசெய்யும் நடைமுறையில் உங்கள் பிள்ளை பின்வருவனவற்றை அவதானிக்க வேண்டும்:

- ஒரு தொழிலை அல்லது தொடர்கல்வி கற்பதற்கான பாடசாலையைத் தேர்வுசெய்வது குறித்து யோசிப்பதற்கும் பல செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் காலம் தேவைப்படும்.
- ஒரு பொருத்தமான தொழிலை அல்லது தொடர்கல்வி பாடசாலையைத் தேர்வுசெய்வதற்கு, எப்பொழுதும் 1-2 வரையானவைகளை மாற்றீடுகளை இருப்புகளாக வைத்திருப்பது முக்கியமானதாகும்.
- ஆசிரியர்களுடன் கதையுங்கள்: „எங்கு எனக்குத் அறியாமை உள்ளது?" நான் பாடசாலையில் 9. அல்லது 10 ஆம் வகுப்பிற்குப் பின்னர் எவ்வாறு தொழிற்கல்விக்கு என்னைத் தயார் படுத்துவது?

பெற்றோர்களாக நீங்கள் எவ்வித உதவிகளை வழங்கலாம்?

- இந்த முடிவெடுக்கும் நடைமுறை குறித்து நீங்கள் அக்கறை காட்டுங்கள்.
- உங்கள் பிள்ளைகளுடன் அவர்கள் தெரிவு செய்துள்ள தொழில் மற்றும் அதற்கு மாற்றீடானவைகள் குறித்து நீங்கள் கதையுங்கள்.

## D ஒரு தொழில் கல்வி இடத்தைத் தேடுதல் (வழமையாகப் பாடசாலையிலிருந்து வெளியேறுவதற்கு 1 வருடம் முன்பாக)

உங்கள் பிள்ளைக்கு தொழில் கல்வி இடத்தைத் தேடுவதற்கு பின்வரும் விளக்கப் பத்திரங்கள் மேலதிகமாக உதவலாம்:

- „தொழில் கல்வி இடத்தைத் தேடுவது: நீங்கள் எவ்வாறு சிறப்பான முறையில் இதை முன்னெடுப்பீர்கள்?"[5]

பெற்றோர்களாக நீங்கள் எவ்வித உதவிகளை வழங்க முடியும்?

- உங்கள் மகள் அல்லது மகன் முன்னராகவே ஒரு தொழில் பயிற்சி இடத்தைத் தேட ஆரம்பிக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்தி உதவி செய்யுங்கள்.
- உங்கள் மகள் அல்லது மகனுக்கு நிராகரித்தல் கிடைத்தாலும் தொடர்ந்து தேடும்படி உற்சாகம் கொடுங்கள்.

---

5 www.berufsberatung.ch >Direkteinstieg für >Aus dem Ausland
www.orientation.ch >Accès direct: je suis >De l'étranger
www.orientamento.ch >Accesso diretto >Provenienti dall'estero

# தாய் மற்றும் தந்தை என்ன செய்யலாம் என உதாரணங்கள்:

## ஆசிரியருடன் கதைத்தல்

லவ்றா 8 வது வகுப்பில் கற்கிறா. அவ வீட்டில் ஒருபோதும் தொழிலை அல்லது தொடர்கல்வி கற்கும் பாடசாலையைத் தெரிவு செய்வது குறித்து கதைப்பதில்லை. „என்ன நடக்கிறது? “, பெற்றோர் தமக்குள்ளே கேட்கின்றார்கள். பாடசாலை முடிவுற்ற பின்பு தாய் ஆசிரியரிடம் சென்று, லவ்றா பாடசாலையிலும் தொழிலை அல்லது இன்னொரு பாடசாலையைத் தெரிவு செய்வதில் அக்கறை இல்லாமல் உள்ளாவா என கேட்டறிகிறார்.

## வித்தியாசமான சந்தர்ப்பங்களுக்குத் தயாராக இருத்தல்

நிக்கொலஸ் 9 வது வகுப்பிற்கு செல்கிறார். ஏனைய பல இளையோர்களைப் போன்று – அவரும் கணனி விஞ்ஞானியாக விரும்புகிறார். அவர் தொழிலைக் கற்பதற்காக விண்ணப்பம் செய்தார், ஆனால் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. பெற்றோர் ஆசிரியர் சந்திப்பின்போது கணணி தொழில்நுட்பத்தில் மிகக் குறைவான கற்கும் இடங்களே உள்ளதாக பெற்றோர் அறிந்து கொள்கின்றனர். அவர்கள் நிக்கொலசிடம் தொழில் ஆலோசனை நிலையத்தில் ஒரு தனிப்பட்ட கலந்துரையாடலுக்கு விண்ணப்பம் செய்யுமாறு கூறுகின்றனர். நிக்கொலஸ் ஒரு புதிய யோசனையுடன் வீடு வருகிறார்: அவர் கணிதத்தில் சிறந்து விளங்கி அத்துடன் தொழில் நுட்பத்தில் அக்கறை கொள்வதால், தற்போது பொலி மெக்கானிக்காக ஒரு தொழிற் கல்வி இடத்தை தேடவுள்ளார். இந்தத் தொழிலிலும் கணனியுடன்தான் வேலை செய்ய வேண்டுமென்பது அவருக்குத் தெரியும். அவர் விரும்பினால், தொழிற் கல்வியின் பின்பு மேலும் விசேட மேற்கல்வியை கணணியில் பெறலாம்.

## குடும்பத்திற்கு எதிர்பார்ப்புகள் உண்டு

„அக்மெட் எப்போது பல்கலைக்கல்வியைத் தொடங்கப்போகின்றார்? “, அவரது ஊரிலுள்ள உறவினர்கள் கேட்கின்றனர். „நீங்கள் நினைப்பதுபோல் அல்லாமல் சுவிசில் பல வேறுகல்வி உள்ளது“ என்கின்றனர் அக்மெட்டின் பெற்றோர். „அக்மெட்டுக்கு கைவேலை நன்கு தெரிவதுடன் வாகனங்கள் என்றால் அவருக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. அவர் வாகனம் திருத்துனராக வர விரும்புகிறார். ஏனென்றால் அவர் பாடசாலையிலும் நன்கு கற்றிருப்பதால், மிகவும் பிரயோசனமான, நான்குவருட அடிப்படைத் தொழிற்கல்வியை மேற்கொள்ளவுள்ளார். இது ஒரு நல்ல தொழிற்கல்வி என்பதுடன், அது அவருக்குப் பொருத்தமாக உள்ளது. அவர் இந்த நிலை அடைந்தது குறித்து நாம் பெருமைப்படுகிறோம். அத்துடன் பாடசாலையில் ஒரு பிறமொழியில் கற்பதென்பது இலகுவானதல்ல.“ வாகனம் திருத்துனராக அக்மெட் உலகம் முழுவதும் தொழில் பெறலாம்!

## குறைந்த மொழியறிவு

பற்மா ஒரு புத்திசாலியான இளம்பெண். அவ 15 வயதில் சுவிஸ் வந்ததால், ஒரு பிரயோசனமான தொழிற்கல்வியைக் கற்பதற்கான பாடசாலை மொழிவளத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆகவே பற்மா கட்டாய பாடசாலையின்பின்பு தொழிலுக்குத் தயார்படுத்தும் இன்னுமொரு பாடசாலைவருடம் அல்லது தொழிற்கல்விக்கு முன்பான கல்வி அல்லது இருவருட அடிப்படைத் தொழிற்கல்வி கற்கலாம் என பற்மா மற்றும் அவளது பெற்றோர் அறிந்துகொள்கின்றனர். பற்மா மற்றும் அவளது பெற்றோருக்கு இவை அனைத்தும் புதிதானது. அவர்கள் இவ்வகையான சந்தர்ப்பங்கள் குறித்து முதலில் சரியாக அறிந்து கொள்ள வேண்டும். பற்மா ஏமாற்றமடைந்துள்ளா. அவ கிம்நாசியம் செல்வதற்கு கனவு கண்டா.... பெற்றோர் அவவிடம், „மற்றவர்களைப்போல் அல்லாது சிலவேளை உனக்கு அதிக காலம் தேவைப்படுகின்றதுபோல் தெரிகின்றது. நீ உமது கல்வி இடைவெளியை சரியாக்கிக் கொண்டால், ஒரு பிரயோசனமான தொழிற்கல்வியைக் கற்கலாம் அத்துடன் சிலவேளையில் பின்பு உயர்கல்வியைக் கற்கலாம். உன்னால் இது முடியும்“ என ஆறுதல் கூறுகின்றனர்.

## தொழில் அல்லது திருமணம்?

சமீறா விரைவில் 16 வயதாகப் போகிறா. ஒரு இளம் வாலிபன் வீட்டுக்கு வருகிறார். அவர் தந்தையிடம் கேட்கிறார்: „நான் சமீறாவைத் திருமணம் செய்யலாமா? “ தந்தை மறுமொழியாக „எமது குடும்பங்கள் ஒன்றுக்குப் பக்கத்தில் ஒன்றாக உள்ளன. எமது பாரம்பரியப்படி நீயும் சமீறாவும் நன்கு பொருந்துகிறீர்கள். ஆனால் உனக்குத் தெரியும் நாங்கள் சுவிசில் வாழ்கிறோம். இங்கு வாழ்க்கைமுறை மாறிக்கொள்கிறது. இங்கு முக்கியமானது என்னவென்றால், பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒரு தொழில் இருப்பதுடன் அவர்கள் வயதுவந்தவர்களாக (18) இருக்க வேண்டும். ஆகவே சமீறா முதலில் ஒரு தொழிலைக் கற்கவேண்டும். பின்பு தான் யாரைத் திருமணம் செய்வதென்பதை அவ தானக முடிவுசெய்துகொள்வா.“

## தந்தை அவரது மகனோடு செல்கிறார்

லியோனாடோ இறுதி வருடத்தில் கற்கிறார். பாடசாலையில் கற்பது அவருக்கு அவ்வளவு இலகுவாக இல்லை. அவர் செய்து அறிந்து கொள்வதற்காக மரவேலை நிறுவனத்தில் ஒரு பயற்சியை செய்யலாம். இந்தப் பயிற்சியை சிறப்பாக செய்துமுடித்தால், அவர் இந்த மரவேலை நிறுவனத்தில் இரண்டு வருட அடிப்படைத் தொழிற்கல்வியைக் கற்கலாம் என்பது அவருக்குத் தெரியும். ஆகவே அவர் சிறிது பதட்டமாக உள்ளார். அத்துடன் பயமாகவும் உள்ளது ஏனென்றால், அவருக்கு அங்கு செல்லும் வழி சரியாகத் தெரியவில்லை என்பதுடன் உரிய நேரத்திற்கும் அங்கு செல்லவேண்டும். தந்தை அவருக்கு உற்சாகம் கொடுக்கிறார்: „உனக்கு இந்தத் தொழிலைப்பற்றி நன்கு தெரியும். நீ சிறிது சிரமப்படத்தான் வேண்டும். முதல் நாளில் நிறுவனத்தின் வாசல் முன்புவரை நான் உன்னை அழைத்துச் செல்கிறேன். நாங்கள் போதியளவு நேரத்திற்கு முன்பாகவே வீட்டிலிருந்து புறப்படுவோம். எங்களுக்கு நேரம் இருந்தால், ஒரு சிறிய நடை போடுவோம். பதட்டத்துடன் உள்ளவர்களுக்கு இது உதவும்.“

## தொடர்புகளைப் பாவித்துக்கொள்ளல்

பவ்லா ஒரு சிறந்த மாணவி. அவவுக்கு பிரெஞ்சு, டொச் மற்றும் கணிதத்தில் நல்ல புள்ளிகள் உள்ளது. இதைவிடவும் அவ போர்த்துக்கேய மொழியைப் பேச, வாசிக்க மற்றும் எழுதத் தொரிந்தவ. அவ பல்வேறு தொழில்கள் குறித்து அறிந்து கொண்டதுடன், தகவல் நிகழ்வுகளுக்கும் கற்கைகளை அறிந்து கொள்ளும் பயிற்சிகளுக்கும் சென்றுள்ளா. இப்போது அவவுக்குத் தெளிவாகிவிட்டது, பெண் எழுதுவினைஞராக கற்பதற்கு அவ விரும்புகிறா. பல விண்ணப்பங்களை அவ அனுப்பியபோதும், நிராகரிப்பே வந்துள்ளது. அவவின் தந்தை ஒரு கட்டிட நிலையத்தில் வேலை செய்கிறார், அவர் தனது நிறுவன அதிபரிடம், „தனது மகள் ஒரு தொழிற்கல்வி இடத்தை தேடுகிறா“ எனக் கூறுகிறார். „எமது அலுவலகத்தில் கேளுங்கள். அங்கும் தொழிற்கல்வி கற்பிக்கின்றது“ என்கிறார் தொழிலதிபர். „நான் அவ்வாறே செய்கிறேன். எனது மனைவியும் தான் வேலை செய்யும் வைத்தியசாலையில் கேட்கலாம். எங்களுக்கு உதவக்கூடிய அயலவர் யாராவது இல்லையா? “, யோசிக்கிறார் தந்தை.

## கைவிட வேண்டாம்

மெக்மெற் துறைசார் வியாபாரதுறை கடமையாளராகக் கற்பதற்கு அனுப்பிய விண்ணப்பத்திற்கு மீண்டும் நிராகரிப்பு வந்துள்ளது. அவர் ஏற்கனவே பல விண்ணப்பங்களை அனுப்பியிருந்தபோதும், இலகுவாக அது சரிவரவில்லை. மெக்மெற் புதிய தொழிற்கல்விகளைத் தேடுவதற்கோ அல்லது புதிய விண்ணப்பங்களை அனுப்புவதற்கோ அடிக்கடி மறந்துவிடுகிறார். இதனால் அவர் தனது உற்சாகத்தை இழந்துவிட்டார். அவர் தனது குடும்பத்துடன் மாலை உணவு உண்ணும்போது பெற்றோர் கூறுகின்றனர்: „நாங்கள் தொழில் ஆலோசனை நிலையத்திற்குச் செல்வோம். அங்கு நீ என்ன செய்ய வேண்டும் மற்றும் எவ்வித உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறிந்து கொள்ளலாம். கைவிட வேண்டாம். உன்னால் எதையாவது அடைய முடியும். நாங்கள் உனக்கு உதவுவதுடன் உனக்கு ஆதரவாக இருப்போம்.“

அன்பான பெற்றோர்களே

உங்கள் மகள் அல்லது மகனின் தொழில் தெரிவு காரணமாக உங்களுக்குக் கேள்விகள் இருப்பின், தாமதிக்க வேண்டாம். ஆசிரியர் ஆசிரியைகளிடம் அல்லது தொழில் ஆலோசனை நிலையத்தில் கேளுங்கள்.